ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1534 - 2008 ජනවාරි 25 වැනි සිකුරාදා - 2008.01.25
*1534 ஆம் இலக்கம் – 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | – |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 64 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | 68 |
| அரசாங்க ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | – |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | – |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | 69 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | – |
| அரசாங்க அறிவித்தல்கள் | 70 |
| விலைக் கட்டளைகள் | – |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | – |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | – |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | 71 |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 78 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | – |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | – |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2008, பெப்புருவரி 01 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, சனவரி 18 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*2008 இன் இல. 46*

*டீஅர்எவ்/21/ஆர்ஈசீரீ/ 2517.*

## இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல், இலங்கைத் தரைப்படையின் நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றம் செய்தல்

### இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2007, யூன் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப்படையிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

பிரிகேடியர் முவகமகே மோஹன்தாஸ், யூஎஸ்பீ. (உ/50738).

### இலங்கைத் தரைப்படையின் நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றம் செய்தல்

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2007 யூன் 30 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றம் செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

பிரிகேடியர் முவகமகே மோஹன்தாஸ் சுமனசேன, யூஎஸ்பீ. (உ/50738).

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007.05.24.

1-794

---

*2008 இன் இல. 47*

*டீஆர்எவ்/21/ஆர்ஈசீரீ/ 2523.*

## இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி நிரந்தரமாக்குதல், இளைப்பாறுதல்

### பதவி நிரந்தரமாக்குதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2007, மார்ச் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து மேஜர் பதவியில் நிரந்தரமாக்குதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

கப்ரின் (தற்காலிக மேஜர்) ஹேவா மாரம்பகே ஹர்ஷ சானக்க பெரேரா, ஆர்எஸ்பீ, இபஉப (உ/60298).

### இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2007, மார்ச் மாதம் 31 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

கப்ரின் (தற்காலிக மேஜர்) ஹேவா மாரம்பகே ஹர்ஷ சானக்க பெரேரா, ஆர்எஸ்பீ, இபஉப (உ/60298).

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007.05.17.

1-801

---

*டீஆர்எவ்/21/ஆர்ஈசீரீ/ 2534.*

## இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி தாழ்த்துதல், இளைப்பாறுதல்

### பதவி தாழ்த்துதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2007, ஏப்பிறல் மாதம் 14 ஆந் திகதியிலிருந்து பதவி தாழ்த்துதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

மேஜர் (தற்காலிக லெப்டினனட் கர்னல்) கிலிமலகே பற்டி நிஹால் தயாரத்ன, பொசேப (உ/60771).

### இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2007, ஏப்பிறல் மாதம் 15 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

மேஜர் கிலிமலகே பற்டி நிஹால் தயாரத்ன, பொசேப (உ/60771)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ, ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007.05.24.

1-818

*2008 இன் இல. 48*

*டீஆர்எவ்/21/ஆர்ஈசீரீ/ 2531.*

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி நிரந்தரமாக்குதல், இளைப்பாறுதல், இலங்கைத் தரைப்படையின் நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றம் செய்தல்

**பதவி நிரந்தரமாக்குதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2007, மே மாதம் 15 ஆந் திகதியிலிருந்து மேஜர் (உபகரணங்கள் கட்டுப்பாட்டாளர்) பதவியில் நிரந்தரமாக்குதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

கப்ரின் (உபகரணங்கள் கட்டுப்பாட்டாளர்) (தற்காலிக மேஜர்) (உபகரணங்கள் கட்டுப்பாட்டாளர்) விபத்தே ஹேரத் முதியன்சேலாகே விஜேகோன் பண்டா, கவீப (உ/61580).

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2007, மே மாதம் 16 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

மேஜர் (உபகரணங்கள் கட்டுப்பாட்டாளர்) விபத்தே ஹேரத் முதியன்சேலாகே விஜேகோன் பண்டா, கவீப (உ/60580).

**இலங்கைத் தரைப்படையின் நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றம் செய்தல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2007, மே மாதம் 16 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் (பொது) உப சேவைக்கு மாற்றம் செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

மேஜர் (உபகரணங்கள் கட்டுப்பாட்டாளர்) விபத்தே ஹேரத் முதியன்சேலாகே விஜேகோன் பண்டா, கவீப (உ/ 61580).

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007.05.17.

1-802

*டீஆர்எவ்/21/ஆர்ஈசீரீ/ 2536.*

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி தாழ்த்துதல், அதிகாரவாணையிலிருந்து அகற்றுதல்

**பதவி தாழ்த்துதல்**

இலங்கை தரைப்படையின் நிரந்தர படையின் பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2004 ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதியிலிருந்து கப்ரின் பதவிக்கு பதவி தாழ்த்துதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

கப்ரின் (தற்காலிக மேஜர்) விஜேபாகு முதியன்சேலாகே அநுருத்த சாமிக்க விஜேபாகு, மிநிரெ (உ/62206).

**அதிகாரவாணையிலிருந்து அகற்றுதல்**

இலங்கை தரைப்படையின் நிரந்தர படையின் பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2004 ஒற்றோபர் 22 ஆந் திகதியிலிருந்து அதிகாரவாணையிலிருந்து அகற்றுதல் (அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

கப்ரின் விஜேபாகு முதியன்சேலாகே அநுருத்த சாமிக்க விஜேபாகு, மிநிரெ (உ/62206).

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007.05.24.

1-817

---

*2008 இன் இல. 49*

*டீவீஎவ்/21/ஆர்ஈசீரீ/ 2269.*

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை தரைப்படையின் நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றம் செய்தல்

**இலங்கைத் தரைப்படையின் நிரந்த (பொது) உப சேவைக்கு மாற்றம் செய்தல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006 மார்ச் 17 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தர (பொது) உப

சேவைக்கு மாற்றம் செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

கப்ரின் (உபகரணங்கள் கட்டுப்பாட்டாளர்) சிரில் ராஜபக்ஷ, இசிரெ (உ/62628).

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007.05.07.

1-803

---

2008 இன் இல. 50

டீஆர்எவ்/21/ஆர்ஈசீரீ/2506.

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, நவெம்பர் மாதம் 29 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப்படையிருந்து வைத்திய காரணிகள் மீது இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

கப்ரின் சேனக்க ராலலாகே விராஜ் துல்ஷான் கருணாதிலக்க, இசிரெ (உ/61573).

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007.04.10.

1-796

---

2008 இன் இல. 51

டீஆர்எவ்/21/ஆர்ஈசீரீ/2526.

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2007 பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப்படையிலிருந்து வைத்திய காரணிகள் மீது இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

கப்ரின் சுமேத லங்காஜீவ மிரிஹான, கரெ (உ/63978).

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007.05.07.

1-798

---

2008 இன் இல. 52

டீஆர்எவ்/21/ஆர்ஈசீரீ/2520.

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2007 மார்ச் 01 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப்படையிலிருந்து வைத்திய காரணிகள் மீது இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

கப்ரின் விஜயமுனி அமல் நிஷான் த சில்வா, ஆர்எஸ்பீ, இபீப (உ/64136).

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007.05.07.

1-799

---

2008 இன் இல. 53

டீஆர்எவ்/21/ஆர்ஈசீரீ/2524.

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2007 மார்ச் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப்படையிலிருந்து

வைத்திய காரணிகள் மீது இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

கப்ரின் லியனாரச்சிகே கெனத் கயான் ரணசிங்க, ஆர்எஸ்பீ, இகாப (உ/63279).

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007.05.17.

1-800

---

2008 இன் இல. 54

டீஆர்எவ்/21/ஆர்ஈசீரீ/ 2503.

### இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2007 மார்ச் 20 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப்படையிருந்து வைத்திய காரணிகள் மீது இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

கப்ரின் அதிகாரி முதியன்சேலாகே லால் உபதிஸ்ஸ, உபுப (உ/63798).

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ, ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007.04.10.

1-816

---

2008 இன் இல. 55

டீஆர்எவ்/21/ஆர்ஈசீரீ/ 2529.

### இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல், இலங்கைத தரைப்படையின் நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றம் செய்தல்

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2007 ஏப்பிறல் 23 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப்படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

கப்ரின் (உபகரணங்கள் கட்டுப்பாட்டாளர்) படுவாவல கன்கானம்லாகே ஆனன்த குமாரசிறி படுவாவல, யூஎஸ்பீ. இபொ (உ/62655).

**இலங்கை தரைப்படையின் நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றம் செய்தல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2007 ஏப்பிறல் 23 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றம் செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

கப்ரின் (உபகரணங்கள் கட்டுப்பாட்டாளர்) படுவாவல கன்கானம்லாகே ஆனன்த குமாரசிறி படுவாவல, யூஎஸ்பீ. இபொ (உ/62655).

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007.05.17.

1-795

---

2008 இன் இல. 56

டீஅர்எவ்/21/ஆர்ஈசீரீ/ 2541.

### இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2007 யூன் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப்படை யிருந்துஇளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

கப்ரின் ஆபரண கெதர சரத் குணசிங்க, இஇபொதுவீப (உ/63958).

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ, ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007.05.28.

1-797

2008 இன் இல. 57

டீஆர்எவ்/21/ஆர்ஈசீரீ/2124.

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2007 மார்ச் மாதம் 22 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப்படையிலிருந்துஇளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

லெப்டினன்ட் (உபகரணங்கள் கட்டுப்பாட்டாளர்) தொடன் கொடகே தொன் முனிரத்ன, யூஎஸ்பீ. இகாப (உ/61638).

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

மேஜர் ஜெனரல் அசோக்க கே ஜயவர்தன,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, வீஎஸ்வீ, யூஎஸ்பீ
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2005.03.23.

1-819

2008 இன் இல. 58

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணையிலிருந்து இராஜினாமா செய்தல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2007 மார்ச் 31 ஆந் திகதியிலிருந்து அதிகாரவாணையிலிருந்து இராஜினாமா செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

லெப்டினன்ட் லொரென்சு ஹேவா வல்லே கம்கானம்கே சமில் பிரசாத், இஉபப (உ/65286).

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007.05.17.

1-804

---

## அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்

2008 இன் இல. 59

அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது:

கலாநிதி ரீ. லலித்தசிறி குணருவன் அவர்கள் 2007, மே மாதம் 12 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு இரண்டு (02) வருட காலத்துக்கு புகையிரத திணைக்களத்தின் பொது முகாமையாளராக.

டீ. விஜேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

1-770

2008 இன் இல. 60

அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது:

இலங்கை விஞ்ஞான சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த, கலாநிதி எம். இலங்கசிங்க அவர்கள் 2007, ஓகத்து 14 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு மறுகட்டளை பிறப்பிக்கும்வரை ஏற்றுமதிக் கமத்தொழில் திணைக்களத்தின் பணிப்பாளராக.

டீ. விஜேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

1-767

2008 இன் இல. 61

அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது:

இலங்கை நிருவாக சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த, திரு. எம். பீ. திசாநாயக்க அவர்கள் 2007, ஒற்றோபர் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு மறுகட்டளை பிறப்பிக்கும்வரை மொனறாகலை நிருவாக மாவட்டத்தின் மாவட்ட செயலாளராக /அரசாங்க அதிபராக.

டீ. விஜேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

1-768

2008 இன் இல. 62

அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது:

இலங்கை நிருவாக சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த, திருமதி வை. எம் ஜ. குமாரிஹாமி அவர்கள் 2007, ஒற்றோபர் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு மறுகட்டளை பிறப்பிக்கும்வரை மலைநாட்டு விவசாயிகள் புனர்வாழ்வு திணைக்களத்தின் ஆணையாளராக.

டீ. விஜேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

1-769

# மற்றைய நியமனங்களும் பிறவும்

*2008 இன் இல. 63*

## இலங்கை நிர்வாக சேவையின் நியமனங்கள்

இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு I இல் உள்ள திரு. டபிள்யு. ஜீ. விக்ரமசிங்க அவர்கள், 2007.07.25 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மேலதிக அறிவித்தல் வரும் வரை விவசாயத் திணைக்களத்தின் நிருவாகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு I இல் உள்ள திரு. டபிள்யூ. கொடிதுவக்கு அவர்கள் 2007.10.24 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மேலதிக அறிவித்தல் வரும் வரை தொழில் ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு I இல் உள்ள திரு. எச். ஹேமச்சந்திர அவர்கள் 2007.11.05 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மேலதிக அறிவித்தல் வரும் வரை தொழில் உறவுகள், மனிதவலு அசைமச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு II இல் உள்ள திரு. பீ. ஸீ. ஆர். பாபா பஜோன் அவர்கள் 2007.10.02 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மேலதிக அறிவித்தல் வரும் வரை ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் உதவி ஆணைளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III இல் உள்ள திரு . சீ. எஸ். எச். விதானாரச்சி அவர்கள் 2006.01.17 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மேலதிக அறிவித்தல் வரும் வரை இடர் முகாமைத்தவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சின் உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III இல் உள்ள திருமதி ஜ. பீ. குணவர்தன அவர்கள் 2006.06.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மேலதிக அறிவித்தல் வரும் வரை இடர் முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சின் உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III இல் உள்ள திரு. பீ. எம். நாணாயக்கார அவர்கள் 2007.01.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மேலதிக அறிவித்தல் வரும் வரை காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III இல் உள்ள செல்வி பீ. எல். ஜே. குணரத்ன அவர்கள் 2007.01.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மேலதிக அறிவித்தல் வரும் வரை காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III இல் உள்ள திருமதி சீ. ஜே. ராஜகருணா அவர்கள் 2007.01.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மேலதிக அறிவித்தல் வரும் வரை கல்வி அமைச்சின் உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III இல் உள்ள திரு. எச். ஓ. டீ. ரோஹண அவர்கள் 2007.01.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மேலதிக அறிவித்தல் வரும் வரை கல்வி அமைச்சின் உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III இல் உள்ள செல்வி எச். டபிள்யூ. பி. எஸ். ஜயதிஸ்ஸ அவர்கள் 2007.01.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மேலதிக அறிவித்தல் வரும் வரை வியாபார, சந்தைப்படுத்துதல் அபிவிருத்தி, கூட்டுறவு மற்றும் நுகர்வோர் சேவைகள் அமைச்சின் உதவிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III இல் உள்ள திருமதி ரீ. டீ. குமாரதாச அவர்கள் 2007.01.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் மேலதிக அறிவித்தல் வரும்வரை வியாபார, சந்தைப் படுத்துதல் அபிவிருத்தி, கூட்டுறவு மற்றும் நுகர்வோர் சேவைகள் அமைச்சின் உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III இல் உள்ள திரு. ஏ.எச்.லக்ஷான் த ஸொய்ஸா அவர்கள் 2007.01.09 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மேலதிக அறிவித்தல் வரும் வரை இடர் முகாமத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சின் உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III இல் உள்ள திரு. டி. டி. எஸ். ஜயவர்தன அவர்கள் 2007.01.29 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மேலதிக அறிவித்தல் வரும் வரை உதவித் தொழில் ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III இல் உள்ள செல்வி ரி. ஜ. ஏ. சிரிவர்தன அவர்கள் 2007.01.29 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மேலதிக அறிவித்தல் வரும் வரை தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III இல் உள்ள திருமதி யூ. டீ. சீதா பத்மசீலீ அவர்கள் 2007.03.06 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மேலதிக அறிவித்தல் வரும் வரை காணி நிருணயத் திணைக்களத்தில் உரித்து நிருவாக உதவி ஆணையாளராக/உரித்து தொடர்பான பதிவாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III இல் உள்ள திரு. ஜ. பி. சுமனதிலக அவர்கள் 2007.03.06 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மேலதிக அறிவித்தல் வரும் வரை காணி நிருணயத் திணைக்களத்தில் உரித்து நிருவாக உதவி ஆணையாளராக/உரித்து தொடர்பான பதிவாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III இல் உள்ள திரு. எம். பி. ஹேவாவிதாரண அவர்கள் 2007.03.19 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மேலதிக அறிவித்தல் வரும் வரை தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தில் உதவிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III இல் உள்ள திருமதி என். டபிள்யூ. டயஸ் அவர்கள் 2007.04.03 ஆந் திகதியிலிருந்து

நடைமுறைக்கு வரும் வகையில் மேலதிக அறிவித்தல் வரும் வரை தொழில் உதவிஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III இல் உள்ள திரு. கே. எல். கே. பெரேரா அவர்கள் 2007.04.03 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மேலதிக அறிவித்தல் வரும் வரை தொழில் ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III இல் உள்ள திரு.ஆர். எச். கமல் அவர்கள் 2007.06.25 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மேலதிக அறிவித்தல் வரும் வரை ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தில் உதவி ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III இல் உள்ள திரு. கே. ஜே. எஸ். மாதவ அவர்கள் 2007.10.29 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மேலதிக அறிவித்தல் வரும் வரை தேர்தல் திணைக்களத்தின் உதவித் தேர்தல் ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

டி. திசாநாயக்க,
செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2008, சனவரி 04.

1-655

# அரசாங்க அறிவித்தல்கள்

## 1974 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, 1976 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, 1977 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, 1980 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க வீட்டாதன உச்சவரம்பு (திருத்தச்) சட்டங்களினால் திருத்தியமைக்கப்பட்டவாறான 1973 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வீட்டாதன உச்சவரம்புச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

இதனகத்து முன்னர் கூறப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்பட்டவாறான 1973 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வீட்டாதன உச்சவரம்புச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைக்குக் கொண்டு வருவதன் மூலம், இதனகத்தேயுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள வீடு எனக்கு உரித்தாப்பட்டுள்ளதை முன்னிட்டு,

இதனகத்தேயுள்ள அடட்வணையில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள வீடு/வீடுகள் எனக்கு உரித்தாக்கப்பட்ட திகதிக்கு நேரடுத்து முன்னர் அவ்வீட்டில் வீடுகளில் அக்கறையுள்வர்களாயிருந்த பேர்வழிகள், வர்த்தமானியில் இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து கணிக்கப்பட்ட ஒரு மாத காலத்திற்குள் இச்சட்டத்தின் கீழ் அவ்வீட்டுக்கு/அவ்வீட்டுகளொவ்வொன்றுக்கும் செலுத்தப்பட வேண்டிய விலை முழுவதற்கும் அல்லதுஅதன் பகுதியெதற்கும் எழுத்து மூலமான உரிமக் கோரிக்கையொன்றைப் பதிவுக் கடிதம் மூலம் எனக்கு அனுப்புதல் வேண்டுமென்றும் அத்தகைய உரிமைக் கோரிக்கையானது பின்வரும் விவரங்களைக் கொண்டதாயிருத்தல் வேண்டுமென்றும், மேற்கூறிய சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் இத்தால் பணிக்கின்றேன்.

(அ) அவரது பெயரும் முகவரியும் ;

(ஆ) அவ்வீட்டில்/வீடுகளில் அவருக்கிருந்த அக்கறையின் தன்மை ;

(இ) அவரது உரிமக் கோரிக்கையின் விவரம் ;

(ஈ) அவ்விலையில் எத்தொகையை அவர் கோருகின்றாரென்பது.

தேசிய வீடமைப்பு ஆணையாளர்.

வீடமைப்பு உச்ச வரம்புக்கிளை,
வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சு,
2 ஆவது மாடி,
"செத்சிறிபாய",
பத்தரமுல்லை.
2008.01.08.

### அட்டவணை

| எனது தொடர் எண் | உறுதியுரை செய்பவரின் பெயரும் முகவரியும் | வரிமதிப்பு இலக்கமும் அமைவிடமும் | மாவட்டம் உள்ளூராட்சிச்சபை, வட்டார இல. என்பன. | மாதிரிப்படம் | துண்டு இல. | உரித்தாக்கப்பட்ட இடப்பரப்பு ஏ. றூ. பே. ஹெக். |
|---|---|---|---|---|---|---|
| சீஎச்/1ஏ/47/ 49257/244 | 1. கே. ஏ. ஏ. ஜெயசேகர, இல. 41/6, ஜகம்பத் மாவத்த, மஹரகம.<br>2. ஏ. கே. வி. சுனில் குமார தசநாயக்க, இல. 54, ஹத்போதிய வீதி,களுபோவில வீதி,தெகிவளை | இல. 559, காலி வீதி, வொள்ளவத்தை, கொழும்பு. | மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத் தில் சல்பிட்டிகோரளே மாநகரசபைக்குட்பட்ட இல. 47, வெள்ளவத்தை, தெற்கு, கொழும்பு. | இல. 2023 சிஎச்/ 1ஏ. 47/49257 /244 | 7706 | 0 0 4.35 0.001100 |

1-732

# வரவு செலவுத் திரட்டுக்கள்

## உயிர் இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர்த் தொழில்நுட்பவியல் நிறுவகம்

### கொழும்பு பல்கலைக்கழகம்

***2006, திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்தொகை***

*(தொகைகள் கிட்டிய ரூபாவுக்குச் சீராக்கப்பட்டுள்ளன)*

| | | 2006 ரூபா | 2005 ரூபா |
|---|---|---|---|
| **நடப்பிலற்ற சொத்துக்கள் :** | குறிப்பு - 02 | | |
| அலுவலகத் தளபாடம், சாதனங்கள் | | 1,213,846 | 1,042,963 |
| கணனிகள் | | 773,404 | 303,783 |
| ஆய்வுகூட, கற்பித்தல் சாதனங்கள் | | 33,575,663 | 7,327,581 |
| இணைப்புக்களும் பொருத்திகளும் | | 51,525 | 57,250 |
| ஆய்வுக்கூட உபகரணங்கள் | | 1,286,200 | 1,244,900 |
| நூலகப் புத்தகங்களும் பருவ இதழ்களும் | | 8,897 | 9,246 |
| | | 36,909,535 | 9,985,723 |
| முதலீடுகள் | குறிப்பு- 03 | 6,140,917 | 5,788,759 |
| **நடப்புச் சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்கு: | | 1,837,095 | 594,645 |
| பிற வருமதிகள் | குறிப்பு - 04 | 280,351 | - |
| வங்கி மீதிகள் | குறிப்பு - 05 | 2,773,019 | 3,116,585 |
| | | 4,890,465 | 3,711,230 |
| *கழிக்க :* **நடப்புப் பொறுப்புக்கள்** | | | |
| அட்டுறு செலவினம் | | 706,742 | 631,378 |
| பணிக்கொடைக்கு ஏற்பாடு | | 2,028,728 | 1,680,402 |
| மீளளிக்கத்தக்க வைப்புகள் | | 22,902 | 1,500 |
| தேறிய நடப்புச்சொத்துக்கள் | | 2,758,372 | 2,313,280 |
| | | 2,132,093 | 1,397,950 |
| தேசிய சொத்துக்கள் | | 45,182,545 | 17,172,432 |
| **நிதிமிடப்பட்டது மூலதனத்தின் மூலம் :** | | | |
| செலவிட்ட மூலதன மானியம் | | 3,902,320 | 669,926 |
| செலவிடப்படாத மூலதன மானியம் | | 188,767 | 5,027 |
| கொடைகளும் நன்கொடைகளும் | | 33,218,391 | 6,883,100 |
| | | 37,309,477 | 7,558,053 |
| **ஒதுக்கங்கள்:** | | | |
| வருமான, செலவுக் கணக்கு | | (607,238) | 387,703 |
| வரையறைப்படுத்திய நிதிகள் | | | |
| அறக்கொடை நிதியம் | | 1,165,220 | 1,165,220 |
| ஆராய்ச்சி மானியங்கள் | குறிப்பு - 06 | 6,565,086 | 8,061,456 |
| 2007 இல் எம். எஸ். சி. ஆராய்ச்சிக் கருத்திட்டங்கள் | | 750,000 | |
| | | 8,480,305 | 9,226,676 |
| | | 45,182,545 | 17,172,432 |

*சிரேஷ்ட உதவி நிதியாளரால் தயாரிக்கப்பட்டு சான்றுப்படுத்தப்பட்டது.*

*முகாமைச் சபைக்காகவும் அதன் சார்பாகவும்.*

*பணிப்பாளர்* *உதவிப் பதிவாளர்.*

**உயிர் இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர்த் தொழில்நுட்பவியல் நிறுவகம்**

**கொழும்பு பல்கலைக்கழகம்**

***2006, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வரவு, செலவுக் கணக்கு***

*(தொகைகள் கிட்டிய ரூபாவுக்குச் சீராக்கப்பட்டுள்ளன)*

| | | 2006<br>ரூபா | 2005<br>ரூபா |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| மீண்டுவருஞ் செலவினத்துக்கு அரச மானியம் | | 13,195,000 | 10,000,000 |
| மூலதனச் சொத்துக்களின் புனரமைப்புக்கு அரச மானியம் | | 2,000,000 | 800,000 |
| நன்கொடைச் சொத்துக்களின் கடன்தீர்த்தல் | | 7,631,253 | |
| ஆராய்ச்சி மானியங்கள் | குறப்பு - 07 | 4,538,782 | 6,308,197 |
| உருவாக்கப்பட்ட வருாமனம் | குறிப்பு - 08 | 1,346,512 | 1,609,650 |
| பிற வருமானம் | குறிப்பு - 09 | 486,646 | 293,239 |
| | | 29,198,193 | 19,011,086 |
| *கழிக்க:* **செலவினம்** | | | |
| தனிப்பட்ட ஊதியங்கள் | குறிப்பு - 10 | 6,890,021 | 4,104,958 |
| ஏனைய நிருவாகச் செலவுகள் | குறிப்பு - 11 | 418,207 | 1,780,247 |
| வழங்கல்கள் | குறிப்பு - 12 | 4,945,816 | 2,659,750 |
| பராமரிப்புச் செலவினம் | குறிப்பு - 13 | 3,022,040 | 2,969,425 |
| ஒப்பந்தச் சேவைகள் | குறிப்பு - 14 | 6,260,767 | 5,719,849 |
| ஏனைய மீண்டுவருஞ் செலவுகள் | குறிப்பு - 15 | 424,743 | 179,836 |
| பணிக்கொடைகளுக்கு ஏற்பாடு | குறிப்பு - 16 | 348,326 | 1,680,402 |
| தேய்மானம் | | 8,160,337 | 199,795 |
| | | 30,470,256 | 19,294,261 |
| செலவினத்துக்கு மேலான வருமான மிகை | | (1,272,063) | (283,175) |
| **வரவு செலவு ஒதுக்கீட்டுக் கணக்கு** | | | |
| வரவு செலவு கணக்கிலிருந்து மீதி மு/கொ | | (1,272,063) | (283,175) |
| வரவு செலவு கணக்கு மு /கொ மீதி | | 387,703 | 4,843,716 |
| முன்னைய ஆண்டு தொடர்பில் சீராக்கல்கள் | | 277,122 | 4,172,838 |
| ஐந்தொகைக்கு மீதி எ/செ | | (607,238) | 387,703 |

**நிதிக் கூற்றுக்கான குறிப்புகள்**

1. **முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள்**

1.1 ***கணக்கீட்டுக்கான அடிப்படை***

*நிதிக் கூற்றுகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கும் இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கும் இணங்க வரலாற்றுக்கிரய அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன.*

2. **சொத்துக்களும் அவற்றின் விலைமதிப்பு அடிப்படையும்**

2.1 *நடப்பிலற்ற சொத்துக்களின் தேய்மானம்*

*நிலைய சொத்துக்கள் திரண்ட தேய்மானம் கிரயத்தில் காட்டப்பட்டள்ளன. தேய்மானம் நேர்கோட்டு முறையின்படி ஆண்டொன்றுக்குப் பின்வரும் வீதங்களில் அறவிடப்படுகின்றது.*

| | |
|---|---|
| இணைப்புக்களும் பொருத்திகளும் | 10% |
| அலுவலகத் தளபாடம், சாதனங்கள் | 10% |
| கணனிகள் | 20% |

| | |
|---|---|
| ஆய்வுக்கூட, கற்பித்தல் சாதனங்கள் | 20% |
| நூலகப் புத்தகங்களும் பருவ இதழ்களும் | 20% |
| ஆய்வுகூட உபகரணங்கள் | 20% |

கொள்வனவு ஆண்டில் தேய்மானம் அறவிடப்படாத அதேவேளையில் விற்றுத் தீர்க்கப்படும் ஆண்டில் முழு ஆண்டுக்கான தேய்மானம் அறவிடப்படுகின்றது.

2.2 'சாரெக்' மானியத்தின் கீழ் கிடைக்கப்பெற்று கொழும்புப் பல்கலைக்கழக்கழகத்திலிருந்து மாற்றப்பட்ட சொத்துக்கள் மீள்மதிப்பீட்டுத்தொகையில் காட்டப்பட்டன.

2.3 கடன்தீர்த்தல்

சொத்துக்களுக்கான கொடைகளும் நன்கொடைகளும், தேய்மானத்துக்கான அதே அடிப்படையிலான கடன் தீர்த்தல் கழித்த நன்கொடையின் பெறுமதியில் காட்டப்படுகின்றன.

3. **பணிக்கொடைக்கு ஏற்பாடு**

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கப் பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ் ஐந்தொகைத் தேதியில் இருந்தவாறு ஐந்தாண்டுச் சேவையைப் பூர்த்திசெய்த எல்லா ஊழியர்களுக்குமான இளைப்பாற்றுப் பணிக்கொடைக்குக்கணக்குகளில் முழு ஏற்பாடு செய்யப்படுகின்றது.

4. **வருமானமும் செலவினமும்**

4.1 வருவாயை அங்கீரித்தல்

(அ) மாணவர்களிடமிருந்தான வருவாய்க்கும் சேர்வுக் கட்டணங்களுக்கும் காசு அடிப்படையில் கணக்கு வைக்கப்படும் அதேவேளையில் வட்டி வருமானத்துக்கு அட்டுறு அடிப்படையில் கணக்கு வைக்கப்படுகின்றது.

ஆ) குறித்த நிதிகளிலிருந்தும் அறக்கொடையிலிருந்தும் வருமானம் நன்கொடைகள், ஆராய்ச்சி மானியங்கள் மற்றும் வழங்கிய பிற சேவைகளிலிருந்து வருமானம் சம்பந்தப்பட்ட சேவைகள் பூர்த்தி செய்யப்படும் அளவுக்கு உள்ளடக்கப்படுகின்றது. இது பொதுவாக அவ்வாண்டில் ஏற்புடைய செலவினத் தொகைக்குச் சமமானது.

5. அந்நிய நாணயக் கொடுக்கல் வாங்கல்கள் எல்லாம் கொடுக்கல் வாங்கல் தேதியில் நிலவுகின்ற செலாவணி வீதங்களின்படி கணக்கிடப்படுகின்றன.

6. உயிர் இரசாயனவியல், மூலக்கூற்று மற்றும் உயிர்த்தொழில்நுட்பவியல் நிறுவக் கட்டட நிருமாணத்துக்கும் ஆய்வுக்கூடச் சாதனங்களின் ஒரு பகுதிக்கும் SEK 15 மில்லியனுக்கான (ரூ. 180 மில்.) சீடா இலகு கடனூடாக நிதியிடப்பட்டது. இது கொழும்புப் பல்கல்லைக்கழக (இலங்கை அரசாங்கத்தின் சார்பாக கடன்பெறுநர்) புத்தகங்களில் காட்டப்பட்டுள்ளது.

**கொழும்பு பல்கலைக்கழகத்துடனிணைந்த, உயிரிரசாயன, மூலக்கூற்று உயிரியல், உயிர்த்தொழினுட்பவியல் நிறுவனத்தின் 2006 ஆம் ஆண்டு திசெம்பர் 31 அன்று முடிவடைந்த வருடத்துக்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைகழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(2) ஆம் பிரிவு, 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13(7) (ஏ) பிரிவு ஆகியவற்றுக்கு அமைவாக கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை.**

கொழும்பு பல்கலைக்கழகத்துடனிணைந்த, உயிரிரசாயன, மூலக்கூற்று உயிரியல், உயிர்த்தொழினுட்பவியல் நிறுவனத்தின் 2006 ஆம் ஆண்டு திசெம்பர் 31 அன்று முடிவடைந்த வருடத்துக்குரிய நிதிக்கூற்றுக்கள், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைகழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் உருவாக்கப்பட்ட 2003 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க கொழும்புப் பல்கலைக்கழகத்துடனிணைந்த, உயிரிரசாயன, மூலக்கூற்று உயிரியல், உயிர்த்தொழினுட்பவியல் நிறுவன சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு, பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1) ஆம் III ஆம் பிரிவுகள், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3), (4) (7) ஆம் உப பிரிவுகள் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்க வேண்டிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(2) ஆம் பிரிவு, நிதியதிகாரச் சட்டத்தின் 13(7) (ஏ) பிரிவு ஆகியவற்றுக்கு அமைய இவ்வறிக்கை வெளியிடப்படுகின்றது.

1.2 கணக்காய்வின் நோக்கெல்லை:

இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பித்த நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர் , ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்கள், முறைகள், நடைமுறைகள் என்பவற்றிற்கு அமைய, மேற்கொள்ளப்பட்டது. நிதிக் கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும்,

வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, கணக்கீட்டுத் தத்துவங்களினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினை தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அவற்றின் ஒட்டு மொத்த வெளிப்படுத்தல்களின் மதிப்பீடு, பின்பற்றிய கணக்கீட்டுக் கொள்கைகள் பொருத்தமானதாகவும் மாற்றமின்றிப் பிரயோகித்தும் போதியளவில் வெளிப்படுத்தப்பட்டும் காணப்பட்டதா என்பதனை நிர்ணயித்தல் போன்றவற்றினை கணக்காய்வு உள்ளடக்கியது. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான துற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

## 2. நிதிக்கூற்று

### 2.1 அபிப்பிராயம்

எனது ஆய்விலிருந்து தெரிவதும், எனதுசிறந்த தகல்வகளுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களிற்கும் அமைய 2006, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்கீட்டு பதிவேடுகளை கொழும்புப் பல்கழைக்கழகத்துடன் இணைந்த, உயிரிரசாயன, மூலக்கூற்று உயிரியல், உயிர்தொழினுட்பவியல் நிறுவனம் பேணியிருந்ததுடன், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களை தவிர, மேற்சொல்லப்பட்ட அத்தகைய பதிவேடுகளுடன் இணங்கிய வகையில் நிதிசார் கூற்றுக்களானவை, இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கும் நிதிசார் கூற்றுக்களிற்கான குறிப்புகளில் (இலக்கம் 02 தொடக்கம் 16 வரை) சொல்லப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளிற்கும் இணங்க 2006 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கொழும்பு பல்கழைக்கலகத்துடன் இணைந்த உயிரிரசாயன, மூலக்கூற்று உயிரியல், உயிர்த்தொழிநுட்பவியல் நிறுவனத்தின் நிதிநிலைமையையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் தொழிற்பாட்டின் விளைவுகளையும் காசோட்டைத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் காட்டும் வண்ணம் தயாரிக்கப்பட்டு, சமர்ப்பிக்கப்பட்டதென நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ரூபா 304.262 இற்கு வாங்கியள கணனிகளுக்குரிய 20% பெறுமானத் தேய்வு ரூபா 60,852 ஆயினும் 10% பெறுமானத் தேய்வு ஒதுக்கப்பட்டமையால் ரூபா 30,426 குறைவாக பெறுமானத் தேய்வு காட்டப்பட்டிருந்தது. இதன் விளைவாக வருடச் செலவு ரூபா 30.426 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

#### 2.2.2 கிடைக்க வேண்டிய கணக்குகள்

"சீடா சரெக்" வழங்கல்கள் மூலம் ரூபா 185.642 முற்பணமொன்று வெளிநாட்டு நிறுவனமொன்றுக்கு 2005, நவெம்பர் 03 அன்று செலுத்தப்பட்டபோதிலும். அக்கொடுப்பனவுக்குரிய இரசாயன மூலப்பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்கோ, அப்பணத்தை மீளப் பெற்றுக் கொள்வதற்கோ இவ்வருடத்தின் இறுதித் திகதியில் கூட முடியாமற் போயுள்ளது.

#### 2.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் வருமாறு :

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | விபரங்கள் |
|---|---|
| (அ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 110 ஆம் பிரிவு | 2004, 2005 ஆம் ஆண்டுகளுக்குரிய அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. 2004 ஆம் ஆண்டின் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக, 2006, செத்தெம்பர் 28 ஆந் திகதியன்றே உயர் கல்வி அமைச்சு அனுப்பப்பட்டிருந்தது. |
| (ஆ) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 153 ஆம் பிரிவு | ரூபா 27,000 பிடித்து வைக்கும் வரி கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்கப்படவில்லை. பிடித்து வைக்கும் வரிக்கு அமைய பல்லைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2006, நவெம்பர் 17 ஆந்திகதிய சுற்றுநிருபம், 2006 நவெம்பர் 24 ஆந் திகதியன்று கிடைத்ததோடு, சுற்றுநிருபத் திகதி தொடக்கம் ரூபா 45,000 மாத்திரம் (வரி இன்றி) செலுத்தப்பட்டது என்பதும், அது மாதாந்தம் 50,000 ரூபாவையோ வருடாந்தம 500,000 ரூபாவையோ தாண்டவில்லை எனவும் பணிப்பாளர் அறிவித்திருந்தார். |

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | விபரங்கள் |
|---|---|
| (இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீ. ஈ. டீ. 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று நிருபத்தின் 9:8:2 ஆம் பிரிவு | நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளருக்கு 2003 யூன் 01 ஆந் திகதி முதல் 2004, யூன் 30 ஆந் திகதி வரையிலான காலத்துக்கு ரூபா 180,000 மதிப்பூதியக் கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தபோதிலும், அதற்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. 1990 பெப்புரவரி 06 ஆந் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றுநிருப இல. 422 இன்படி, தனது நிலையான பதவியின் கடமைகளுக்கு மேலதிகமாக உயிரிரசாயன, மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர்த் தொழில்நுட்பவியல் நிறுவனத்துக்காக ஆற்றிய சேவைகளுக்காக முன்னாள் பணிப்பாளருக்கு மதிப்பூதியக் கொடுப்பனவொன்று முகாமைச் சபையின் அனுமதியுடன் ஈட்டப்பட்ட இலாபத்திலிருந்து செலுத்தப் பட்டுள்ளமையைப் பணிப்பாளர் கணக்காய்வுக்காக அறிவித்திருந்தார். |
| (ஈ) அரச நிதிப் பிரமாணங்கள் : | |
| (i) நி. பி. 119 | முன்னாள் பணிப்பாளருக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 232,616 அவரது வேண்டுகோளின்படி 19 தவணைகளில் அறவிடத் தீர்மானிக்கப்பட்டபோதிலும், அதற்கான உயர்கல்வி அமைச்சுச் செயலாளரின் அனுமதி பெறப்படவில்லை. |
| (ii) நி. பி. 772 | பயன்படுத்தாமலிருந்த காலமும் பெறுமானமும் கணக்காய்வுக்கு முன்வைக்கப்படாத, பொருட் பதிவேடு விடயங்கள் 9 ஐ நீக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நி. பி. 875 | திரண்ட நிதியில் இருந்து நடப்பு வருடத்தில் ஓர் அதிகாரிக்குச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 150,000 இடர்க்கடன் பணத்துக்குரிய வட்டி வருமானம் ரூபா 3,491 ஐ நிறுவனத்தின் நிதியத்திலிருந்து வைப்புச் செய்வதற்கும், மீண்டுவரும் மானியங்களிலிருந்து கடன் கொடுப்பதற்கும் திறைசேரியின் விசேட அனுமதி தேவையெனினும் அவ்வாறான அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. |

2.2.4 போதிய அதிகாரத்துவத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

1994, யூன் 14 ஆந் திகதி 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றுநிருபத்துக்கு முரணாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்தின்படி, இரண்டாம் மூன்றாம் மொழிகளில் புலமை தொடர்பாக சம்பளம் மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவாக 2006 ஆம் ஆண்டில் ரூபா 8,353 செலுத்தப்பட்டிருந்தது. மிகைக் கொடுப்பனவுகள் தவறாக சம்பளத்துடன் சேர்த்துக் கணிக்கப்பட்டமையால் பல்கலைக்கழக சேமலாப நிதியத்துக்கும் ஊழியர் பொறுப்பு நிதியத்துக்கும் ரூபா 17,505 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. அத்தோடு நீண்டகால சேவைக் கொடுப்பனவாக ரூபா 2,400 செலுத்தப்பட்டிருந்தது.

இந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுச் செலுத்துகைகள் அரச சட்டதிட்டங்களுக்கு முரணானவையென பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகமும் தேசிய வரவு செலவுத் திட்டப் பணிப்பாளரும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் அறிவித்திருந்த போதிலும், அக்கொடுப்பனவுகள் தொடர்ந்தும் செய்யப்பட்டுக் கொண்டேயிருந்தன.

## 3. நிதிசார், மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதிசார் செயற்பாடு

#### 3.1.1 நிதிசார் பெறுபேறுகள்

கணக்காய்வுக்கு முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2006 திசெம்பர் 31 அன்று முடிவடைந்த வருடத்துக்காக நிறுவனத்தினது பணிகளின் பெறுபேறுகள், மீண்டுவரும் செலவுகளுக்காக அரசாங்க மானியத்தை கணக்கிட முன்னர், ரூபா 16,467,063 பற்றாக்குறையைக் காட்டியதோடு, முந்திய வருடத்தின் ஒப்பான பற்றாக்குறை ரூபா 11,083,175 ஆக இருந்தது. மீண்டுவரும் செலவுகளுக்காகக் கிடைத்த ரூபா 15,195,000 அரசாங்க மானியம் காரணமாக ஆய்வுக்குரிய வருடத்துக்குரிய பற்றாக்குறை ரூபா 1,272, 063 தேறிய பற்றாக்குறையாக மாறியதோடு முந்திய வருடத்தின் மீண்டும் செலவுகளுக்காகக் கிடைத்த ரூபா ரூபா 10,800,000 அரசாங்க மானியம் காரணமாக அவ்வருடத்தின் தேறிய பற்றாக்குறை ரூபா 283,175 ஆக இருந்தது.

3.2 செயலாற்றல் செயற்பாடு

3.2:1 செயற்பாடு

பின்வருன அவதானிக்கப்பட்டன:-

(அ) ஆய்வுக்குரிய வருடத்தினுள் விஞ்ஞான முதுமாணிப் பட்டப்பின் கற்கை நெறிகள் இரண்டு நடாத்தப்பட்டிருந்தன. 2005, 2006 இல் பதிவு செய்யப்பட்ட மாணவர் எண்ணிக்கை முறையே 08 உம், 10 உம் ஆக இருந்ததோடு, அதில் 2006 இல் பட்டப் படிப்பை நிறைவு செய்தோரின் எண்ணிக்கை 03 ஆக இருந்தது. ஒரு மாணவனுக்கான சராசரிக்கிரயம் ரூபா 99,975 ஆகும்.

(ஆ) நடத்தப்பட்ட தத்துவ முதுமாணிப் பட்டக் கற்கைநெறிகள் 5 இலும் பதிவு செய்யப்பட்ட மாணவர் தொகை 14 ஆக இருந்தது. அவர்களுள் 03 பேர் மாத்திரமே பட்டத்தை நிறைவு செய்திருந்தனர். கற்கை நெறிக்காலம் முழுநேர/பகுதி நேர 03-05 வருடங்களாக இருந்தது.

(இ) இரண்டு (02) தத்துவ கலாநிதிப் பட்டக் கற்கைநெறிகள் நடத்தப்பட்டிருந்தன. பதிவு செய்யப்பட்ட மாணவர் தொகை 02 ஆகும். அவர்களுள் எந்த மாணவரும் பட்டத்தைப் பூர்த்தி செய்திருக்கவில்லை. கற்கை நெறிக்காலம் முழுநேர/ பகுதி நேர 04-07 வருடங்களாக இருந்தது.

(ஈ) 10 பரப்புக்கள் அடங்கும் வகையில் 32 ஆராய்ச்சிச் செயற்றிட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன. 11 ஆராய்ச்சிகள் நிறைவு செய்யப்பட்டு அறிக்கைகள்வெளியிடப்பட்டுள்ளன. 21 செயற்றிட்டங்களின் ஆராய்ச்சி நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த அதேவேளை அவற்றுள் 06 ஆராய்ச்சிச் செயற்றிட்டங்கள் 2006 இறுதியில் நிறைவு செய்யப்பட வேண்டியவையாக இருந்தன. இந்த ஆராய்ச்சிச் செயற்றிட்டங்களுக்காக 'சீடா சரெக்' மானியங்களின் கீழ் ரூபா 2,364,300 உம், வேறு மானியங்களின் கீழ் ரூபா 2,171,200 உம் செலவு செய்யப்பட்டிருந்தன.

(உ) பட்டப்பின் கற்கைநெறிகளுக்காக வெளிவாரி விரிவுரையாளர்கள் 15 பேரின் சேவை பெறப்பட்டிருந்ததோடு, அவர்கள் விரிவுரை மணித்தியாலங்கள் 102 நடத்த வேண்டுமெனத் திட்டமிடப்பட்டிருந்தபோதிலும், விரிவுரை மணித்தியாலங்கள் 74 அதாவது 72% மாத்திரமே நடத்தப்பட்டிருந்தன. இந்த வெளிவாரி விரிவுரையாளர்களுக்கான கிரயம் ரூபா 58,538 ஆக இருந்ததோடு, ஒரு விரிவுரை மணித்தியாலத்துக்குரிய கிரயம் ரூபா 791 ஆக இருந்தது. விரிவுரை மணித்தியாலங்கள் 07 வீதம் ஒதுக்கப்பட்டிருந்த வெளிவாரி விரிவுரையாளர்கள் இருவர் உரிய விரிவுகைளை நடத்தியிருக்கவில்லை. உள்ளக விரிவுரையாளர்கள் 5 பேரினால் விரிவுரை மணித்தியாலங்கள் 390 நடத்தப்பட்டிருந்தன.

(ஊ) முன்னைய வருடத்தைவிட ஒரு பதவி அதிகரித்தமை காரணமாக 11 பேரைக் கொண்ட பணியணியிருக்கான ஆய்வுக்குட்படும் வருடத்தில் ரூபா 4,404,115 செலவு செய்யப்பட்டுள்ளமையால், தலா ஒருவருக்கான சராசரிச் செலவு ரூபா 400,374 ஆகியுள்ளது. அதுமுன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 73% அதிகரிப்பாகும்.

3.3 கூட்டிணைப்புத் திட்டமும் செயற்பாட்டுத் திட்டமும்

2003 யூன் 02 ஆந் திகதிய பீ. ஈ. டீ. 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று சநிருபத்தின் 5.1 ஆம் பிரிவின் படி, நிறுவனத்தின் நெறிப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக வினைத்திறனுடைய வகையில் பயன்படுத்தத்தக்கவாறு, மூன்று வருடங்களுக்கு குறையாத காலப்பகுதிக்காக கூட்டுத் திட்டமொன்றும் செயற்படுத்தல் திட்டமொன்றும் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

எனினும் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட கூட்டுத் திட்டத்தில் நிறுவனத்தின்பணி, நோக்கங்கள், உத்திகள் மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்தனவேயன்றி, மேற்படி சுற்றுநிருபத்தின்படி, கூட்டுத்திட்டமும் செயற்படுத்தல் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

பீ. ஏ. பேமதிலக,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

**2006, திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த வருடத்துக்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 108(2) ஆம் பிரமாணம், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(7) (ஏ) பிரமாணம் ஆகியவற்றுக்கு அமைவான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை**

மேற்படி அறிக்கை 2007, செத்தெம்பர் 10 ஆந் திகதி நடத்தப்பட்ட கணக்காய்வுக் கமிட்டியில் கலந்துரையாடப்பட்டது. குறித்துக் காட்டப்பட்டிருந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக எடுக்கப்படும் குறைபாடு கீழே தரப்பட்டுள்ளன.

2.2.1 *கணக்கீட்டுக் குறைபாடுகள்*

2007 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் முன்னைய ஆண்டுக்குரிய சீராக்கமாக பின்வரும் பேரேட்டுப் பதிவு மூலம் திருத்தப்பட்டது. (பேரேட்டுக் குறிப்பு இல. 01)

| | |
|---|---|
| வருமான செலவுக்கணக்கு செலவு | 30,426 |
| கணனி தேயள்வு ஒதுக்கக் கணக்கு | 30,426 |

2.2.2 *பெறுவனவுக் கணக்கு:*

கோரிய இரசாயனப் பொருள்கள் உரிய காலத்தில் கிடைக்காமையால் செலுத்தப்பட்ட முற்பணத்தை திருப்பிச் செலுத்துமாறு அறிவிக்கப்பட்டது.

இந்திய வங்கிகளுக்கூடாக பணத்தை அனுப்புவது தொடர்பாக நடைமுறையில் உள்ள சட்டதிட்டங்கள் காரணமாகவே பணம் எமக்குக் கிடைப்பது தாமதமாகியது.

2007, ஏப்பிறல் 27 ஆந் திகதியன்று எமது 086100151189712 ஆம் இலக்கக் கணக்குக்கு மேற்படி பணம் 192,432 ரூபா கிடைத்துள்ளது. இப்பணம் கிடைத்தமைக்கான வங்கி அறிவித்தலின் பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு : I).

2.2.3 *சட்டதிட்டங்கள், ஒழுங்குவிதிகள், முகாமைத் தீர்மானங்களுக்கு அமைவாகாமை.*

(அ) பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக 2004, 2005 ஆம் ஆண்டு அறிக்கைகள் பின்வரும் திகதிகளில் உயர்கல்வி அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டன.

2004 ஆண்டறிக்கை – 2006, செத்தெம்பர் 26 ஆந் திகதி
2005 ஆண்டறிக்கை – 2007, மே 28 ஆந் திகதி.

பல தடவைகள் நினைவூட்டிய போதிலும், பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு வேண்டிய பிரதிகள், தேவைப்படும் திகதி எமக்கு இதுவரையில் அறிவிக்கப்படவில்லை.

(ஆ) குறித்துக் கொண்டேன்.

(இ) குறித்துக் கொண்டேன்.

(ஈ) அரச நிதிப் பிரமாணங்கள்

(I) குறித்த அறவீட்டுக்காக, உயர்கல்வி அமைச்சு செயலாளரின் மேல் அனுமதி 2007, மே மாதம் 06 ஆந் திகதி பெறப்பட்டது. மேல் அனுமதி வழங்கப்பட்ட கடிதத்தின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு : II) 2007, ஓகத்து 25ஆந் திகதி அன்று உள்ளவாறு கழிக்க பேண்டிய மீதிப் பணம் 12,242 ரூபா ஆகும்.

(II) 2007, யூன் மாதம் 21 ஆந் திகதி நடைபெற்ற பேரவைக் கூட்டத்தில் பயன்படுத்தப்படாத 9 உருப்படிகளையும் ஏலத்தில் விற்பனை செய்வதற்காகத் தீர்மானிக்கப்பட்டது. மேலும் அந்த உருப்படிகளுக்காகத் தனியானதொரு ஏல விற்பனை நடத்தப்படும் ஒரு சந்தர்ப்பத்தில் அவ்வுருப்படிகளையும் விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

(III) உயிரிரசாயன, மூலக்கூற்று உயிரியல், உயிர்தொழில்நுட்ப நிறுவனம் 2004 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதோடு, பணியணியினருக்காக திடீர் இடர்க்கடன் வழங்குவதற்குப் போதுமான நிதியம் நிறுவனத்தில் இல்லாமையினால் பல்கலைக்கழக மானியங்கள்ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட சுற்றுநிரூபங்களுக்கு அமைவாக குறித்த கடன் தொகை செலுத்தப்பட்டது.

2.2.4 இரண்டாம், மூன்றாம் மொழிப்புலமைக் கொடுப்பனவு, நீண்டகாலச் சேவை கொடுப்பனவு மற்றும் பதில் கொடுப்பனவுகளுக்காக பல்கலைக்கழக ஊழியர் சேமலாப நிதியக் கொடுப்பனவானது பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட சுற்றுநிருபங்களுக்கு அமையவே செய்யப்பட்டது.

3.1.1 குறித்துக் கொண்டேன்.

3.2:1 *பணி ஆற்றுகை :*

(அ) ஒவ்வொரு பட்டப்பின் பட்டக் கற்கைநெறியும் ஒன்றரை வருடத்துக்கும் மேற்பட்டவையாகையால் தத்துவமுதுமாணிப் பட்டப் பின் கற்கை நெறிகளுக்காக தலா மாணவ ஆண்டு சராசரிச் செலவு 99,975 ரூபா ஆகும்.

(ஆ) குறித்துக் கொண்டேன்.

(இ) உயிரிரசாயன மூலக்கூற்று உயிரியல், உயிர்தொழினுட்ப நிறுவனம் 2004 ஆம் ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டமையால், 2006 முடிவடையும் போது தத்துவ முதுமாணிப் பட்டப் பின் பட்டக்கற்கை நெறிக் காலப்பகுதி முடிவடைந்திருக்கவில்லை.

(ஈ) 2006 ஆம் ஆண்டில் நிறைவு செய்ய வேண்டியிருந்த ஆறு ஆராய்ச்சி அறிக்கைகளை நிறைவு செய்ய முடியாமற் போனமைக்காக காரணம், அவ்வறிக்கைகளில் மேற்பார்வையாளர்களால் எடுத்துக் காட்டப்பட்ட திருத்தங்கள் செய்யப்பட வேண்டியிருந்தமையாகும்.

(உ) நடத்த வேண்டிய, விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கையுடன் ரியுடோரியல் மற்றும் செயன்முறை வகுப்பு மத்தியாலங்களும் உள்ளடங்கி இருந்தமையும் சில விரிவுகைள் 2007, சனவரி/பெப்புருவரி நடத்த வேண்டியவையாக இருந்தமையும் இவ்வேறுபாட்டுக்குக் காரணமாயின.

(ஊ) 2005 ஆம் ஆண்டு இறுதியாகும்போது பணியணியினரின் தொகை 10 ஆக இருந்தது. 2005 இன் ஆரம்பத்தில் பணியணியினர் இரண்டாக இருந்தது. மீதி 08 பேர் 2005 இல் நியமிக்கப்பட்டனர். அவர்களுள் 04 பேர் 2005 நவெம்பர், திசெம்பர் மாதங்களில் நியமிக்கப்பட்டனர்.

எனினும் மேற்படி பணியணியினர் 10 பேருக்கும் 2006 ஆம் ஆண்டில் முழுக் காலத்துக்கும் சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.

தலா சராசரி கிரயம் 73% அதிகரிப்பைக் காட்டுவதற்கான காரணங்கள் மேற்கூறப்பட்டவையாகும்.

3.3 கூட்டிணைந்த திட்டமும செயற்படுதிட்டமும்:

நிறுவனத்தினால் பி. ஈ. டீ. 12 இன்படி 2007 – 2011 காலப்பகுதிக்காக கூட்டிணைந்த ஒரு திட்டமும் செயற்பாட்டுத் திட்டமும் தயாரிக்கப்பட்டு பேரவையினால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

தற்போது அச்சுப்பதிப்புக்கு அனுப்பப்பட்டுள்ளமையால் அச்சுவேலை முடிடைந்தவுடன் ஒரு பிரதி வழங்க ஆவன செய்வேன்.

(பேராசிரியர்) கமணி எச். தென்னக்கோன்
பணிப்பாளர்.

பிரதிகள் :-
1. கே. சீ. பீ. சேனாரத்ன,
கணக்காய்வு அதிகாரி,
அரச கணக்காய்வுப் பிரிவு,
கொழும்புப் பல்கலைக்கழகம்.
2. செயலாளர் - உயர்கல்வி அமைச்சு
3. செயலாளர் - நிதி, திட்டமிடல் அமைச்சு.
4. தலைவர் - பல்கலைக்கழக மானியங்கள், ஆணைக்குழு.
5. உபவேந்தர் - கொழும்பு பல்கலைக்கழகம்.

1-676

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, (திருத்தப்பட்ட) வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான தீர்மானம்

கடன் இலக்கம் : 0300000252
கடனாளியின் முழுப்பெயர் : பரூஹுபொலகே தோன சுமித்திரா பெரேரா

